**கவனிக்க.-** *21.09.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1778 - 2012 සැප්තැම්බර් මස 28 වැනි සිකුරාදා - 2012.09.28

*1778 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1356 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1364 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி V இல் 2009 ஆம் ஆண்டின் காலாண்டிற்கான (யூலை - செத்தெம்பர்) புத்தகப் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.

# பதவிகள் — வெற்றிடம்

**பாலிந்தநுவர பிரதேச சபை**

மேல் மாகாண அரச சேவையில் வீதித் தொழிலாளி மற்றும் சுகாதார தொழிலாளி வெற்றிடங்களுக்காக ஆட்சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

| தொடர் இல. | பதவிப்பெயர் | பதவி எண்ணிகை | சம்பள அளவுத்திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01 | வீதித் தொழிலாளி | 01 | ரூபா 11,730 - 10 x 120 - 10 x 130 - 10 x 145 - 12 x 160 - ரூபா 17,600 | 8 ஆந் தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் |
| 02 | சுகாதாரத் தொழிலாளி | 02 | ரூபா 11,730 - 10 x 120 - 10 x 130 - 10 x 145 - 15 x 160 - ரூபா 17,600 | கல்வித் தகைமை கருத்திற்கொள்ளப்பட மாட்டாது |

**2. தேவையான ஏனைய தகைமைகள் :**

(1) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) சிறந்த உடல் ஆரோக்கியமும் நல்லொழுக்கமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

(3) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 15 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(4) தற்போதும் இச்சபையில் உரிய பதவிகளில் தற்காலிக/அமைய/பதிலீட்டு/கொடுப்பனவு அடிப்படையில் சேவையிலிருப்போரிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் தகைமையானோர் தெரிவுசெய்யப்படுவர்.

விண்ணப்பப்படிவத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தனுப்புதல் வேண்டும்.

(1) பிறப்புச் சான்றிதழ் ;

(2) கல்விச் சான்றிதழ் ;

(3) வசிப்பிடத்தை உறுதிசெய்யும் சான்றிதழ் ;

(4) அண்மையில் பெற்றுக்கொண்ட நற்சான்றிதழ் ஒன்று.

விண்ணப்பதாரிகள் கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பூர்த்திசெய்து 10.10.2012 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், பாலிந்தநுவர பிரதேச சபை" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் உரிய பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

ஏ. என். பெலவத்தை,
செயலாளர்,
பாலிந்தநுவர பிரதேச சபை.

பாலிந்தநுவர பிரதேச சபை,
09.08.2012.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**பாலிந்தநுவர பிரதேச சபை**

மேல் மாகாண அரசாங்க சேவையின் ........................................................................... பதவி

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.

முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் :-----.

2. நிரந்தர பதிவு முகவரி :-----.

3. நிரந்தர முகவரி :-----.

4. விவாகமானவரா ? விவாகமாகாதவரா ? :-----.

5. பால் (ஆண்/பெண்) :-----.

6. பிறந்த திகதி :-
ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.

7. நீர் பரம்பரையினாலா/பதிவினாலா இலங்கைப் பிரசை :----.

8. கல்வித் தகைமைகள் : க. பொ. த. (சா. த.) பரீட்சை :
சித்தியடைந்த ஆண்டும் சுட்டிலக்கமும் :-

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |

ஏனைய தகைமைகள் :-

9. தொழிற் தகைமைகள் :----.

10. சேவை அனுபவம் :

(i) தற்போது சேவையாற்றும் நிறுவனம் :----.
(ii) தற்போது வகிக்கும் பதவி :----.
(iii) அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
(iv) முன்னர் சேவையாற்றிய நிறுவனத்தில் வகித்த பதவி :----.

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானவையெனவும் பிழையற்றவையெனவும் உறுதிமொழிகின்றேன். ஆட்சேர்த்துக்கொள்ளும் நிபந்தனைகளுக்கமைய நான் பொய்யான தகவல் தந்திருப்பின் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவரின் பதவியை வறிதாக்கவும் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் தெரியவரின் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**தற்போது அரச சேவையில் இருப்பவராயின் நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ........................................................ இந்நிறுவனத்தில் .......................................... ஆக சேவையாற்றுகிறாரெனவும், அவரை விடுவிக்க முடியும்/முடியாது எனவும் அவர் எவ்வித குற்றத்திற்கும் ஆளாகவில்லையெனவும் இத்தால் சிபார்சு செய்கிறேன்.

-----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவிப்பெயர் :-----.
திணைக்களம்/நிறுவனம் :----.

9-726

---

**பலப்பிட்டி பிரதேச சபை**

பலப்பிட்டி பிரதேச சபையில் வீதித் தொழிலாளி பதவிகள் வெற்றிடத்திற்கான ஆட்சேர்ப்பு

பலப்பிட்டிய பிரதேச சபையில் வெற்றிடமாகவுள்ள வீதித் தொழிலாளி பதவிகளை நிரப்புவதற்கான கீழே குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டுள்ள தென் மாகாணத்தில் வதியும் ஆண்/பெண் இரு சாரார்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **சம்பள அளவுத்திட்டம்**.- பீஎல்-1-2006/ஏ- ரூபா 11,730-10 x 120-10 x 130-10 x 145-12 x 160- ரூபா 17,600.

2. **வயதெல்லை**.- 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் (தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உச்ச வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.) இவர்கள் உரிய திணைக்களத் தலைவர் மூலம் விண்ணப்பப்படிவங்களை அனுப்ப வேண்டும்.

3. **கல்வித் தகைமைகள்**.- கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையில் குறைந்தபட்சம் 5 ஆம் தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

4. **சேர்த்துக்கொள்வதற்கான பொது நிபந்தனைகள்** :

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் ;
(ii) விண்ணப்பதாரி, விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னதாக 3 வருடங்கள் தென் மாகாணத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும் ;
(iii) விண்ணப்பதாரி சீரிய நடத்தையும், சிறந்த தேகாரோக்கியமும் கொண்டிருத்தல் ;
(iv) பலப்பிட்டிய பிரதேச சபையில் தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கும் தற்காலிக/அமைய/பயிலுனர்/ஒப்பந்தச் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படும்.

5. **ஆட்சேர்ப்பு முறை**.- ஒழுங்குமுறை அடிப்படையில் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றினூடாக ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

6. **சேவையில் ஈடுபடுவதற்கான நிபந்தனைகள்** :

(i) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உடையது ;
(ii) இப்பதவி 3 வருடகால தகுதிகாண் காலத்தைக் கொண்டது.

7. **சேவை நிபந்தனைகள்**.- தாபனக் கோவையின் நிபந்தனைகளுக்கும் நிதிச் சட்டக்கோவை விதிமுறைகளுக்கும், திணைக்கள கட்டளைச் சட்டங்களினதும் ஏற்பாடுகளுக்கும் தென் மாகாண சபையின் அல்லது பலப்பிட்டிய பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படும் கட்டளைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உடன்பட்டு செயற்படுதல் வேண்டும்.

8. **விண்ணப்பிக்கவேண்டிய முறை**.- இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் 12'' x 8'' அளவிலான கடதாசியில் தயாரிக்கப்பட்டு 2012.09.30 ஆந் திகதிக்கு முன்னர் "தவிசாளர், பலபிட்டிய பிரதேச சபை, பலபிட்டிய" என முகவரியிடப்பட்டு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வீதித் தொழிலாளி பதவிக்கான விண்ணப்பப்படிவம்" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

ஏ. தயாரத்ன த சில்வா,
தவிசாளர்,
பலப்பிட்டி பிரதேச சபை.

பிரதேச சபை,
பலப்பிட்டி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தென் மாகாண அரசாங்க சேவையில் பலப்பிட்டி பிரதேச சபையின் ........................................... பதவி**

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   (ii) முதலெழுத்துக்களால் குறிக்கும் பெயர் :----.

2. நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :----.
3. பிரதேச செயலாளர் பிரிவு :----.
4. நிரந்தர முகவரி :----.
5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
6. பால் :----.
7. பிறந்த திகதி :

| வருடம் | | | | | மாதம் | | | திகதி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|

8. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று வயது :

| வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|

9. இலங்கைப் பிரசையாவது பிறப்பினாலா ? பதவின் மூலமாகவா ? :----.

10. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சைகள் பற்றிய விபரம்) :----.
(சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகள் இணைக்கவும்.)

11. விண்ணப்பதாரி தற்போது சேவை ஒன்றில் ஈடுபட்டுள்ளாராயின்,

(i) பதவி :----.
(ii) சேவை புரியும் இடம் :----.
(iii) நியமனத் திகதி :----.

12. நீங்கள் எப்போதாவது குற்றச்சாட்டு ஒன்றிற்காக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ? :----.

13. விண்ணப்பதாரியின் உறுதி :
இங்கு தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் வெளிப்படுத்துகிறேன். இவ்வாட்சேர்ப்பு பற்றிய நிபந்தனைகளுக்கு அமைய என்னால் பிழையான தகவல்கள் ஏதும் தரப்பட்டிருப்பதாக நிரூபிக்கப்படுமாயின், பதவி நியமனத்திற்கு முன்னராயின் தகைமை இழப்பிற்கும், பதவி நியமனத்திற்குப் பின்னராயின் பதவி நீக்கத்திற்கும் உள்ளாக்கப்படுவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

14. அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் :

இவ்விண்ணப்பதாரி தற்போது இந்நிறுவனத்தில்/திணைக்களத்தில் சேவையாற்றுகிறார். அவரது கடமையும்/நடத்தையும் திருப்திகரமானது எனவும் அவருக்கு இந்நியமனம் கிடைக்கப்பெற்றால் அவரைச் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்./முடியாது எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
நிறுவனத் தலைவரது கையொப்பம்.

திகதி :----.

9-727

---

## நுவரெலியா பிரதேச சபை

### பதவிகள் வெற்றிடம்

நுவரெலியா பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள கீழ்க்காணும் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் தகுதியான விண்ணப்பதாரிகளிடம் கோரப்படுகின்றது.

| தொடர் இல. | பதவிப்பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள குறியீட்டு இல. | சம்பள திட்டம் | தேவையான கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 01 | காரியாலய அலுவல்கள் உதவியாளர் | 1 | பீஎல் 1 2006(ஏ) | ரூ. 11,730-10X120-10X130-10X145-10X160-ரூ. 17,600 | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற் படாத அமர்வுகளில் சிங்களம் அல்லது தமிழ் பாடத்துடன் ஆகக்குறைந்தது 6 பாடங்களில் சித்தி |
| 02 | காவலாளர் | 1 | பீஎல் 1 2006(ஏ) | ரூ. 11,730-10X120-10X130-10X145-10X160-ரூ. 17,600 | எட்டாம் (8) வகுப்பு சித்தி |

| தொடர் இல. | பதவிப்பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள குறியீட்டு இல. | சம்பள திட்டம் | தேவையான கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 03 | நீர் விநியோக தொழிலாளி | 1 | பீஎல் 1 2006(ஏ) | ரூ. 11,730-10X120-10X130-10X145-10X160-ரூ. 17,600 | எட்டாம் (8) வகுப்பு சித்தி |
| 04 | சுகாதார தொழிலாளி | 3 | பீஎல் 1 2006(ஏ) | ரூ. 11,730-10X120-10X130-10X145-10X160-ரூ. 17,600 | எட்டாம் (8) வகுப்பு சித்தி |

**பொதுவான தகைமைகள் :**

(1) விண்ணப்பதாரி பரம்பரையில் அல்லது பதிவுசெய்ததின் பிரகாரம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) விண்ணப்பதாரி நுவரெலியா பிரதேச சபையின் எல்லைக்குள் கடந்த 3 வருட காலத்திற்குள் நிரந்தரமாக வசித்தவராக இருத்தல் வேண்டும். (வாக்குரிமை, பெயர்ப்பட்டியல் மூலமாக அல்லது பிரதேச செயலகத்தில் வழங்கப்பட்ட சான்றிதழ் மூலம் வதிவிடத்தை உறுதிசெய்தல் வேண்டும்.) (நுவரெலியா பிரதேச சபையில் தற்போது நிரந்தர/ அமைய/ பதில்/ தற்காலிக/ ஒப்பந்த/ மதிப்பீடு அடிப்படையில் சேவை செய்யும் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் நுவரெலியா பிரதேச சபையின் எல்லைக்குள் வசிப்பது கட்டாயமில்லை.)

(3) நுவரெலியா பிரதேச சபையில் தற்போது நிரந்தர/அமைய/பதில்/தற்காலிக/ஒப்பந்த/மதிப்பீடு அடிப்படையில் சேவை செய்யும் சேவையாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(4) நன்னடத்தையுடன் கூடிய சுகதேகியாக இருத்தல் வேண்டும்.

(5) விண்ணப்பப்படிவத்தை பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாது 45 வயதுக்கு மேற்படாத வகையில் இருத்தல் வேண்டும். (தற்போது சேவையில் இருப்பவருக்கு வயது எல்லை கருத்தில் எடுக்கப்படாது. ஆனால் பதவிக்கு சேர்த்துக்கொள்ளும் திகதிக்கு குறிப்பிட்ட வயது எல்லைக்குள் இருத்தல் வேண்டும்.

(6) விண்ணப்பதாரி தண்ட சட்ட விதிமுறையின்கீழ் நீதிமன்றமொன்றினால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவராகவோ மாகாண அரச சேவையில் நீக்கப்பட்டவராகவோ இருக்கக் கூடாது.

(7) சேவையின் தேவைக்கமைய முறையான நேர்முகப் பரீட்சையின் மூலம் தகைமையாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

(8) விண்ணப்பம் கோரப்பட்ட பின் அல்லது கோரப்பட்ட கால எல்லைக்குள் அல்லது சேர்த்துக்கொள்ள தாமதமாவது அல்லது திருத்தப்படுவது அல்லது இவ்வறிவித்தலை நிராகரிப்பது அல்லது திருத்துவது நுவரெலியா பிரதேச சபையின் செயலாளருக்குரியதாகும்.

**சேர்த்துக்கொள்ளும் முறை :**

(1) நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்.

(2) குறிப்பிட்ட தகைமைகள் பூரத்திசெய்தவர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்

**சேவை நிபந்தனைகள் :**

(1) இப்பதவி ஓய்வு ஊதியத்திற்கு உரித்துடையதாகும்.

(2) விதவைகள், அனாதைகள் ஓய்வு ஊதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(3) பதவி 3 வருட சேவைக் காலத்திற்கு உட்படுவதுடன் அந்த 3 வருட இறுதியில் சேவை, வருகை, ஒழுக்கம் உயர் நிலையில் இருக்கும் சேவையாளர்களுக்கு மாத்திரம் பதவி நிரந்தரமாக்கப்படும்.

(4) இச்சேர்த்துக்கொள்ளல் இலங்கைக் குடியரசின் ஸ்தாபன கோவையின் சட்டதிட்டங்களுக்கும் நிதிச் சட்டதிட்டங்களுக்கும் திணைக்கள கட்டளைக்கும் அரச அல்லது மத்திய மாகாண சபையினால் அவ்வப்போது வெளியிடப்படும் ஏனைய சட்டங்கள் கட்டளைகளுக்கு அமைய செயல்பட சகல சேவையாளர்களும் உடன்பட்டிருத்தல் அவசியம்.

**விண்ணப்பம் கோரப்படும் முறை**.- விண்ணப்பதாரர் இங்கு குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி ஏ4 அளவிலான கடதாசியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2012.09.30 ஆந் திகதிக்கு அல்லது அதற்குமுன் கிடைக்கும் வகையில் "செயலாளர், நுவரெலியா பிரதேச சபை, கொட்டகலை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் முறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி "........................." என்று குறிப்பிடப்படல் வேண்டும். பூர்த்தியற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் குறிப்பிட்ட திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பம் கோரப்பட்ட பின் அல்லது கோரப்பட்ட கால எல்லைக்குள் அல்லது சேர்த்துக்கொள்ள தாமதமாவது அல்லது திருத்தப்படுவது அல்லது இவ்அறிவித்தலை நிராகரிப்பது அல்லது திருத்துவது நுவரெலியா பிரதேச சபையின் செயலாளருக்குரியதாகும்.

பெருமாள் பிரதீப்,
செயலாளர்,
நுவரெலியா பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
நுவரெலியா,
கொட்டகலை.
2012, ஒற்றோபர் 1.

மாதிரி விண்ணப்பப்படிவம்

...................................................... பதவி

1. விண்ணப்பதாரரின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) :----.

2. முதலெழுத்து குறிப்பிடப்படும் பெயர் :----.

3. அஞ்சல் முகவரி :----.

4. தொலைபேசி இலக்கம் :----.

5. பிறந்த திகதி :

வருடம் :----, மாதம் :----, திகதி :----.

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

7. விண்ணப்பப்படிவத்தை பொறுப்பேற்கும் இறுதித் திகதியில் வயது-

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

8. ஆண்/பெண் விபரம் :----.

9. விவாகமானவரா ? விவாகமாகாதவரா ? :----.

10. இனம் :----.

11. நீங்கள் இலங்கைப் பிரசையா ? அவ்வாறாயின் பரம்பரையில் அல்லது பதிவுசெய்ததின் பிரகாரமா ? :----.

12. கல்வித் தகைமைகள் :----.

13. தொழில் பயிற்சி அனுபவம் :----.

14. நீங்கள் தற்போது நுவரெலியா பிரதேச சபையில் சேவை செய்பவராயின்-

(i) தற்போது வகிக்கும் பதவி :----.
(ii) அப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.
(iii) அப்பதவியின் தன்மை (நிரந்தர/அமைய/தற்காலிக/பதில்/ஒப்பந்த/மதிப்பீடு/அடிப்படையிலா ? :----.

15. நீர் எப்போதாவது அல்லது குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவரா ? :----.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விடயங்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியானவை என என் மீது ஆணையாக வெளிப்படுத்துகிறேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏதேனும் பிழையானதென இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கும் முன் தெரியவந்தால் நான் தகுதி அற்றவர் எனவும், நியமனம் கிடைத்தபின் அவ்வாறான விடயம் நிரூபிக்கப்பட்டால் எவ்வித நஷ்டஈடும் இன்றி பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுவேன் என நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**தற்போது அரச சேவையில் இருக்கும் விண்ணப்பதாரர்களுக்கான நிர்வாக அதிகாரியின் சான்றிதழ்**

அவ்விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ...................................................... இந்நிறுவனத்தில் ........................................................ ஆக சேவையில் உள்ளார். இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் அவன்/அவளை இச்சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும், அவன்/அவள் எவ்வித தண்டனைக்கும் உட்படவில்லை என இத்தால் உறுதிப்படுத்துவதுடன் விண்ணப்பப்படிவத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
பதவிக்கான முத்திரை :----.

9-728

---

**பதவி வெற்றிடம்**

மேல் மாகாண அரச சேவையின் மஹர பிரதேச சபையில் வெற்றிடமாகவுள்ள கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக மேல் மாகாணத்தில் வதியும் தகுதி உடையோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) | கல்வித் தகைமை |
|---|---|---|---|---|
| 1 | வீதி பராமரிப்பு சிற்றூழியர் | 1 | ரூ. 11,730 - 10 X 120 - 10 X 130 - 10 X 145 - 12 X 160 - ரூ. 17,600 (பீ. எல். 1-2006ஏ) | 5 ஆம் தரம்/6 ஆம் தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும் |

இணைத்துக்கொள்வதற்கான பொது நிபந்தனைகள்.- விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு அண்மித்த 3 வருடங்கள் மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்கப்படும் திகதிக்கு 18 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (அரச அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர சேவையில் உள்ளவர்கள் தொடர்பாக ஆகக்கூடிய வயதெல்லை கணக்கிலெடுக்கப்பட மாட்டாது).

விண்ணப்பதாரி சிறந்த தேகாரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும். தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றில் குற்றவாளியாக குற்றம் சுமத்தப்பட்டவர் அல்லது அரச உள்ளூராட்சி சேவையில் சேவையிலிருந்தும் நீக்கப்பட்டவராக இருத்தலாகாது. விண்ணப்பம் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படும் கால எல்லைகளுக்கிடையில் அல்லது இவ் இணைத்துக்கொள்ளுதலை தாமதப்படுத்தல் அல்லது மாற்றுதல் அல்லது இவ் அறிவித்தலை இரத்துச்செய்தல் அல்லது திருத்தம் செய்தல் என்பன மஹர பிரதேச சபையின் செயலாளரையே சார்ந்ததாகும்.

**சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் உடையது.
(ii) மூன்று வருடங்கள் நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டதாகும்.
(iii) அநாதைகள், விதவைகள், அநாதைகள் விதுரர்கள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

(iv) இவ் இணைத்துக்கொள்வதற்கான நிபந்தனைகள் மற்றும் விதிகளுக்கு மேலதிகமாக இலங்கைக் குடியரசின் கட்டளைகளுக்கும், மேல் மாகாண சபை அல்லது மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு அல்லது பிரதேச சபையினால் அடிக்கடி வெளியிடப்படும் விதிகள் மற்றும் கட்டளைகளுக்கும் அமைவாக அலுவல்களைச் செய்வதற்கு கட்டுப்படல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை.**- (1) கட்டமைப்புடனான நேர்முகப் பரீட்சையொன்றின் ஊடாக பொருத்தமானவர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

(2) விண்ணப்பங்களுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரதிகளை இணைத்து அனுப்புவதுடன் மூலப்பிரதிகளை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(3) விண்ணப்பங்களுடன் கீழ்க்குறிப்பிடப்படும் கடித ஆவணங்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகளை அனுப்ப வேண்டும் :

(i) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
(ii) கல்விச் சான்றிதழ்
(iii) அண்மையில் பெறப்பட்ட கிராமசேவை உத்தியோகத்தரின் சான்றிதழ்
(iv) அண்மையில் பெறப்பட்ட நற்சான்றிதழ் 2
(v) ஏனைய தகைமைகளைக் காட்டும் சான்றிதழ்
(vi) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்

**விண்ணப்பிக்கும் முறை.**- விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கு ஏற்ப 12" x 8" அளவிலான தாளில் தயாரித்து விண்ணப்பிக்கும் பதவியை உரிய கடித உரையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு 2012.10.31 ஆந் திகதிக்கு முன்பு ''செயலாளர், மஹர பிரதேச சபை, பஹலகரகஹமுன, கடவத்தை'' எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். (தற்போது மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தை சேவைத் தலைவரின் ஊடாக அனுப்ப வேண்டும்.) குறிப்பிட்ட தினத்திற்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ஏ. கே. என். இந்திரஜித்,
செயலாளர்,
மஹர பிரதேச சபை.

மஹர பிரதேச சபை,
பஹலகரகஹமுன,
கடவத்தை.
2012.09.05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மஹர பிரதேச சபை**

மேல் மாகாண அரச சேவையில் .................................. பதவி

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
முதலெழுத்தைக் குறிக்கும் பெயர் :----.

2. வதியும் மாவட்டம் :----.

3. நிரந்தர முகவரி :----.

4. ஆண்/பெண் :----.

5. பிறந்த திகதி :----.

2012.10.15 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

7. இலங்கைப் பிரசையாயின் பிறப்பிலா ? பதிவுசெய்யப்பட்டதன் மூலமாக ? :----.

8. (i) கல்வித் தகைமை :

| பாடம் | சித்தி | வருடம் | சித்தி |
|---|---|---|---|
| .................. | .................. | .................. | .................. |
| .................. | .................. | .................. | .................. |
| .................. | .................. | .................. | .................. |
| .................. | .................. | .................. | .................. |
| .................. | .................. | .................. | .................. |

(ii) ஏனைய தகைமைகள் :----.

9. தொழிற்தகைமை :----.

10. சேவை அனுபவம் :

(i) தற்போது வகிக்கும் பதவி :----.
(ii) அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
(iii) அப்பதவியின் சேவைக்காலம் :----.
(iv) இதற்கு முன்பு சேவையாற்றிய இடம் மற்றும் வகித்த பதவி :----.

விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானவை என்றும் நான் இத்தால் உறுதி செய்கின்றேன். இவ் ஆட்சேர்ப்பு விடயம் தொடர்பான நிபந்தனைகளுக்கு அமைய என்னால் பொய்யான தகவல்கள் அறிவிக்கப்பட்டுள்ளது என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பு அல்லது பின்னர் அறியப்படுமிடத்து நான் சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்காக பிரிவுத் தலைவரின் சான்றிதழ்**

இவ்விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ............................................................ என்பவர் தற்போது இவ்வலுவலகத்தில் ...................................................................... ஆக சேவையாற்றுகின்றார்.

விண்ணப்பத்தை சான்றுப்படுத்தி சமர்ப்பிக்கின்றேன்/இல்லை.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
அலுவலக முத்திரை :-

திகதி :----.

9-844

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## நியாகம பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்திற்குள் அங்கீகரிக்கப்பட்ட உப விதிகளை ஏற்றுக்கொள்ளல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தில், 122 முதல் 126 வரையிலான பிரிவுகளின் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி அலுவலக (அங்கீகரிக்கப்பட்ட உப விதிகள்) சட்டத்தின் 2(3) பிரிவில் ஏற்றுக் கொள்ளவதற்காக பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரித்த உப விதிகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவில் உள்ளூராட்சி அமைச்சருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி அவரால் உருவாக்கப்பட்டு இல. 510/7 உம் 1988.08.23 ஆந் திகதியுடைய வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான தென் மாகாணத்தினால் அனுமதியளிக்கப்பட்டதும். அதன்படி இல. 648 உம், 1991.02.01 ஆந் திகதியுடைய வர்த்தமானியின் அறிவித்தல் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான அங்கீகரிக்கப்பட்ட

உப விதிகள் 01 முதல் 42 வரையான பகுதி இவ் அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரமாகிய நாள் முதல் செல்லுபடியாகும் வகையில் ஏற்றுக்கொள்ள நியாகம பிரதேச சபையில் 2012, யூலை 24 ஆந் திகதி நடைபெற்ற அவைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பிரேரணை மூலம் நிர்மாணமாகியுள்ளதை இத்தால் அறியத்தருகிறேன்.

பிரசாத் வீரக்கொடி,
தலைவர்,
நியாகம பிரதேச சபை.

பிரதேச சபை,
நியாகம.
2012, யூலை 24.

9-1141

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.